## நம்பர் 1 - தமிழ்நாடு என்ற இலக்கிற்கு

# இப்பயணம் பாதை அமைக்கும்!

**சென்னை, ஆக.31-**

**தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அரசு முறைப் பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு புறப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

Off to Germany and the United Kingdom, carrying all your wishes and love with me.




U.A.E., ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின், U.S.A. ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்கள் அளித்த வெற்றியின் ஊக்கத்தோடு, அந்தப் பயணங்களால் பெறப்பட்ட முதலீடுகள் தரும் நம்பிக்கையோடு ஜெர்மனி & இங்கிலாந்து நாடுகளுக்குப் பயணமாகிறேன்...

இதுவும் Hit அடிக்கும்! நம்பர் 1 தமிழ்நாடு என்ற இலக்குக்கு இந்தப் பயணங்கள் பாதை அமைக்கும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.8.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்கள் 1.9.2025 முதல் சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2545/ மற்றும் பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2500/ என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படும் என்று ஆணையிட்டதற்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் ஒரு குவிண்டால் நெல்லிற்கு ரூ.2500/ வழங்குவோம் என்று குறிப்பிட்டதை நிறைவேற்றியதற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

# ஒப்பந்ததாரர்களுக்கு தங்கு தடையின்றி நிதி ஒதுக்குகிறார்!

# ‘பசுமையான சாலைகள் - பாதுகாப்பான பயணம்’ என்பதே முதல்வரின் தாரக மந்திரம்!

## நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் மாநாட்டில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக. 31-**

**நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் மாநாட்டில் பேசிய அமைச்சர் எ.வ.வேலு, “ஒப்பந்ததாரர்களுக்கு தங்கு தடையின்றி நிதி ஒதுக்குகிறார் முதல்வர் அவர்கள்” என்றும் “பசுமையான சாலைகள் - பாதுகாப்பான பயணம் என்பதே முதல்வரின் தாரக மந்திரம்” என்றும் குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டில் உரையாற்ற வந்ததற்காக, ஒப்பந்ததாரர்கள் சார்பாகவும், நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றும் தலைமைப் பொறியாளர் உட்பட அனைவரின் சார்பாகவும் எனது மகிழ்ச்சியை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவர் பெருந்தகை,

**“அருவினை யென்ப உளவோ கருவி யான்**

**காலம் அறிந்து செயின்”** என்று சொல்கிறார்.

அதன் பொருள், தேவையான சாதனங்களையும், நேரத்தையும் அறிந்து செயல்பட்டால், முடியாதது என்று எதுவும் இல்லை; அனைத்தும் முடிப்பதுதான்.

அதனால்தான், இன்றைய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நெடுஞ்சாலைத்துறை செப்பனிட வேண்டும் என்ற அடிப்படையில்தான், தென்னிந்தியாவின் முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான இயந்திர வர்த்தக கண்காட்சி திறப்பு விழாவிற்கும்,தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கும் சிறப்புரை நிகழ்த்த நம்முடைய துணை முதலமைச்சரை நாம் அழைத்தோம். அவர் சிறப்பாக உரிய நேரத்தில் வருகை புரிந்து, இந்த நிகழ்ச்சியை வாழ்த்த இருக்கிறார்.

### 68,150 கி.மீ. சாலை பராமரிப்பு!

தமிழ்நாடு அரசின் சார்பாக, மாநில நெடுஞ்சாலைத்துறை என்பது 12,625 கிலோமீட்டரும்; மாவட்ட முக்கிய சாலைகள் என்பது,11,994 கிலோ மீட்டரும்; மாவட்ட இதர சாலைகள் என்பது43,531 கிலோமீட்டரும்என்று, மொத்தமாக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் 68,150 கிலோமீட்டர் நீளத்திற்கு தமிழ்நாடு அரசின் நிதியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர, ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலைத்துறைமூலமாக 6,850 கிலோமீட்டர்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

“முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம்” என்ற ஒரு அற்புதமான திட்டத்தை,‘திராவிட மாடல்’ ஆட்சி வந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்அறிவித்தார்கள். அந்த அடிப்படையில், மாவட்டங்களை இணைக்கும் போக்குவரத்து செறிவு அடிப்படையில் அது தேர்வு செய்யப்படுகிறது.

இந்த நான்கரைஆண்டுகாலத்தில் 820 கிலோமீட்டர் மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாகவும்;2,020 கிலோமீட்டர் நீள இருவழிச்சாலைகளை, இருவழித்தடமாகவும் திராவிட மாடல் ஆட்சியில் உயர்த்தி இருக்கிறோம்.1,197 தரைப் பாலங்கள், உயர் மட்ட பாலங்களாக இந்த ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

### சிறப்பான நிதி ஒதுக்கீடு!

இந்தத் துறையில் அனைத்துப் பணிகளும் முதலமைச்சர்அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்தத் துறை ஒப்பந்ததாரர்கள் மூலமாக சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தங்கு தடையின்றி நிதி ஒதுக்கீடு அளிக்கிற காரணத்தினால்தான் இந்தப் பணிகள் சிறப்பாக அமைகிறது.

நான் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு ஒன்று நினைவூட்ட விரும்புகிறேன். நான் நாகரீகம் கருதி,அந்த மாநிலத்தின் பெயரைசொல்லவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்பு வாட்ஸ் அப்பில் ஒரு செய்தியைப் பார்த்தேன். ஒரு மாநிலத்தில் நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் பணிகள் முடித்து ஓராண்டு காலம் ஆகியும் அந்த அரசால் நிதியை அளிக்க முடியவில்லை.அதனால் நிதித்துறை செயலாளரின் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் கதவை தட்டுவதைப்போல, ஒரு காட்சியை நான் பார்த்தேன்.

ஆனால், அந்த நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஒப்பந்ததாரர்களை வைக்கவில்லை. பணி முடிந்தால் உடனே நிதியை தர வேண்டும் என்று சொல்லும் ஒரு முதலமைச்சரை இந்தத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. அதனால் தங்கு தடையின்றி நிதி ஒதுக்கீடு செய்வதில் முதலமைச்சர் இந்தியாவில் முதன்மை மாநிலமாகதமிழ்நாட்டை ஆக்கிக் கொண்டிருக்கிறார்.

மக்களோடு நேரடியாக தொடர்புள்ள துறை எது என்றால்,அதுநம்முடையநெடுஞ்சாலைத்துறைதான். வீட்டில் இருந்து வெளியே காலை வைத்தால் நெடுஞ்சாலைத்துறையின் சாலையில்தான் காலை வைக்க முடியும்.நம்முடைய நெடுஞ்சாலைத்துறையில், நமது முதலமைச்சர் அவர்களின் கனவு என்னவென்றால்,‘பசுமையான சாலைகள் பாதுகாப்பான பயணம்’; அதுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தாரக மந்திரம். அந்த அடிப்படையில்தான் நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக ஆண்டுக்கு 5 லட்சம் மரக்கன்றுகளை நாம் நட்டுக் கொண்டிருக்கிறோம்.

### துணை முதல்வரின் கைராசி!

இதைவிட இந்த நெடுஞ்சாலைத்துறையின் ஒரு சிறப்பு என்னவென்றால், ஒரு



சிறிய பள்ளம், குழி இருந்தால்கூட, இன்றைக்கு இருக்கும் சமூக வலைதளத்தை பயன்படுத்தி, அதை பெரிதாக ஆக்கும் நிலை இருந்து கொண்டிருந்தது. அதை அகற்ற வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் இட்ட ஆணையை,01.11.2023 அன்று நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் ‘நம்ம சாலை’ என்கிற ஒரு அற்புதமான செயலியை நெடுஞ்சாலைத் துறை மூலமாக அறிமுகம்செய்தோம். அது இன்றைக்கு நாட்டு மக்கள் மத்தியில் பாராட்டத்தக்கதாக பேசப்படும் ஒரு செயலியாக இருக்கிறது. அவ்வாறு பாராட்டும் அளவுக்கு அந்த செயலி வந்ததற்கு நம்முடைய துணை முதலமைச்சருக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய ராசியான கையால் அதனை தொடங்கி வைத்ததன் விளைவு, இன்றைக்கு அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்என்று சொன்னால், அது மிகையாகாது.

இந்தச் செயலியை பார்த்துவிட்டு, இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் பிற துறைகளும் “இப்படி நாங்கள் செய்யப்போகிறோம்; இந்தச் செயலியை எவ்வாறு நீங்கள் தயார் செய்தீர்கள்” என்று, எங்களுடைய துறையின் செயலாளரிடம் கேட்டு, அதனுடைய தொழில்நுட்பங்களை பிற துறைகளும் இன்றைக்கு அறிந்து கொண்டிருப்பதைநான் பார்க்கிறேன்.

### எல்லாருக்கும் எல்லாம்!

இது நமது அரசு. திராவிட மாடல் அரசு என்று சொன்னால்,‘எல்லாருக்கும் எல்லாம்’ கிடைக்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டு முதலமைச்சர்அவர்களின் இலக்கு. அந்த வகையில்தான், ஒப்பந்ததாரர்களாகிய உங்களுக்கெல்லாம் ஏற்கனவே ஒப்பந்தப் பதிவினை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கவேண்டும் என்ற நிலை இருந்தது உங்களுக்கு நினைவிருக்கும். ஆனால், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களிடம் உங்களின் கோரிக்கையை சொன்னவுடனேயே, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதனை புதுப்பித்தால் போதும் என்று ஆணை பிறப்பித்தார்.

திராவிடமுன்னேற்றக்கழக அரசு பொறுப்பேற்றவுடனேயே, உங்களுடைய கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றினோம். கடந்த மூன்று ஆண்டுகளாக விலைவாசி உயர்வு என்பது ஐந்தாண்டுக்கு ஒரு முறை, ஆறாண்டுக்கு ஒரு முறை என்ற நிலையில்தான் இருந்தது. ஆண்டாண்டு பொருள்களின்விலை எவ்வாறு உயர்கிறது? சிமெண்ட் விலை உயரும்; கம்பி விலை உயரும்; நெடுஞ்சாலைத்துறை பணிக்கு வேண்டிய அத்தனை பொருட்களின் விலையும் உயரும்; இறங்கும், ஏறும். அதை கண்டறிந்து, ஒவ்வொரு ஆண்டும் அதை எல்லாம் ஒன்றுபடுத்தி ‘Schedule Operate’ என்பதை, இந்தக் கட்டுமானத்திற்கு விலை உயர்வை உயர்த்தி தந்திருக்கும் அரசு, இந்த திராவிடமாடல் அரசு என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

### சாலை மேம்பாட்டுத் திட்டம்!

இதைவிட ஒரு சிறப்பு இந்த ஆட்சியில் ஒப்பந்ததாரர்களுக்குஎன்ன கிடைத்திருக்கிறது என்றால்,“முதலமைச்சரின் சாலைமேம்பாட்டு திட்ட”த்தில் உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்தச் சாலையில் ஒப்பந்ததாரர்களாக நீங்கள் பணியாற்றியதன் மூலமாக ‘PreQualification’ என்பது உங்களுக்கு அதிகமாக ஏற்பட்டதன் நன்மை என்ன என்றால், ஒன்றிய அரசாங்கத்தின் தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலையாக இருந்தாலும், இன்றைக்கு ஒன்றிய அரசாங்கத்தின் ஒப்பந்ததாரர்களாக உங்களை உயர்த்திக் கொள்வதற்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர்அவர்கள் இன்றைக்கு வழிவகைசெய்திருக்கிறார் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

அதோடு மட்டுமல்ல, ஒப்பந்த காலத்திற்கு முன்னர் நீங்கள் பணிகளை முடித்தால், உங்களுக்கு போனஸ் 1 சதவிகிதம் தர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள்ஆணையிட்டதின் அடிப்படையில் இன்றைக்கு ஒப்பந்ததாரர்களுக்கு போனஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, விலை விகிதம் மாற்றத்தின் தொகையை மனதில் கொண்டு, இன்றைக்கு ‘Escalation’ என்பதையும் இந்த அரசு உங்களுக்கு தந்து கொண்டிருக்கிறது.

### தரமே தாரக மந்திரம்!

எனவே,‘தரமே தாரக மந்திரம்’ என்பது தான் முதலமைச்சர்அவர்களின் வாக்கு. தரமான சாலை அமைப்பதால், பராமரிப்பு செலவினம் குறைகிறது; விபத்துகள் குறைகிறது; பயண நேரம் மிச்சமாகிறது.

பணிகளில் அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளையும் நீங்கள் சிறப்பாக வைத்தால்தான் விபத்துகளை குறைக்க முடியும். நான் மீண்டும் சொல்கிறேன், ஒப்பந்ததாரர்கள் விபத்தை குறைக்க வேண்டும் என்றால், பேரிகேட்டில் உங்கள் கவனம் அதிகமாக இருந்திட வேண்டும்.

இந்த அரசுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பினை நீங்கள் தந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். அதனால்தான் ஒப்பந்ததாரர்கள் மாநாடு என்று சொன்னவுடனேயே முதலமைச்சர் அவர்கள் “நான் வாழ்த்த வருகிறேன்” என்று நமக்கு ஒப்புதல் தந்தார்கள். நேற்றைய தினம்,பீகாரில், ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் அவர் கலந்து கொள்ளவேண்டியகடமை இருந்தது. அதற்கு சென்று வந்தவருக்கு சற்று உடல் நலக்குறைவு. அதனால்தான், அவருடைய மறுபதிப்பாக, ஏன் அவருடையஉருவமாகவே எங்களுக்கு காட்சி தந்து கொண்டிருக்கும் துணை முதலமைச்சரை“என் சார்பாக நீங்கள் வாழ்த்துங்கள்” என்று நமக்கு அனுப்பி தந்திருக்கிறார்கள். எனவே, அத்தகைய முதலமைச்சர்அவர்களுக்கு, என் சார்பாகவும், வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் சார்பாகவும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

### முதல்வரின் அடையாளம் துணை முதல்வர்!

நான், முதலமைச்சரின் அடையாளமாக வந்திருக்கும்துணை முதலமைச்சருக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சி இருந்தபோது, இந்த ஒப்பந்ததாரர்கள் பல்வேறு நிலைகளில் கஷ்டப்பட்டார்கள். ஆனால், இந்த ஆட்சி வந்தவுடனேயே ஒப்பந்தர்கள் என்னவெல்லாம் கோரிக்கைகள் வைத்தார்களோ, அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிற ஆட்சிதான், இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதையும் நான் நினைவூட்டி, இங்கே தலைமையுரை ஆற்றியவரும் ஒரு சூசகமான வார்த்தையைச் சொன்னார். இந்த ஆட்சியில் பல பலன்களை நாங்கள் பெற்றிருக்கிறோம்; நன்றி செலுத்த வேண்டிய நேரத்தில் நாங்கள் நன்றி செலுத்துவோம்.2026இல் அந்த நன்றியை நாங்கள் செலுத்துவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த நன்றியை எதிர்பார்த்து கூட முதலமைச்சர் செய்யவில்லை.

நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்... தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப்பொருத்தவரை,‘எல்லார்க்கும் எல்லாம்’ கிடைக்க வேண்டும். அந்த எல்லோரிலும் ஒருவர்தான், ஒப்பந்ததாரர்கள். உங்களுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்அவர். அவர் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக அலங்கரிக்கும்போதுதான் நெடுஞ்சாலைத்துறை இன்னும் மிளிரும். அதற்கு உற்ற துணையாக இவர்கள் இருப்பார்கள் என்பதைநான் துணை முதலமைச்சருக்கு ஒப்புதல் தந்து, இந்த மாநாடு வெற்றி பெறுவதற்கு என் நல்வாழ்த்துகளைச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.